# கன்னித்தமிழும் கற்பும்

**முனைவர் மு.புஷ்பரெஜினா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

பண்டுதொட்டு வழங்கிவரும் பேறுபெற்ற தமிழ் மொழியானது, கன்னித்தமிழ் எனும் சிறப்புவாய்ந்தது. முன்னா் தமிழ்நாடு குமரிக்கண்டம் என்றே அழைக்கப்பட்டது. காவிரி, கங்கை, கோதாவரி, யமுனை எனப் பல்வேறு நதிகளும் பெண்மையைப் பெருமைப்படுத்துகின்றன என்றால் மிகையாகாது. பெண்மையைப் போற்றும் இலக்கியங்கள், அறம், பொருள், இன்பம் போன்றவற்றைப் பெற ஒழுக்கமுடன் வாழவலியுறுத்திய மரபில், இன்றைய தமிழ்நாட்டின் அவலநிலையை, எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்மையின் மேன்மை**

பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நற்பண்புகள் உடையவளாயிருத்தல் வேண்டும் என்பதே பொதுவழக்கமாக இருந்துள்ளது. ஆகவே பல்வேறு இலக்கியங்களும், காப்பியங்களும் இந்நற்பண்புகள் உடைய பெண்ணைக் கற்புக்கரசி என்று முத்திரை பதிக்கின்றன. பழங்காலத்தில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழு பருவ மகளிருக்கும் சமூகக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அக்காலப்பெண்கள் தாய், மனைவி என்ற நிலையிலிருந்து குழந்தையைப் பெற்றெடுப்பது மட்டுமல்லாது, அரசர்க்கும் அறிவுரை கூறும் பெரும்பேறு பெற்றிருந்தனர்.

**கற்பு**

சங்ககால மக்கள், தலைவன் தலைவியாக வாழ்ந்த வாழ்க்கையைக் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என்று வகைபடுத்தி வாழ்ந்தனர். திருமணத்திற்கு முன்பு தலைவன் தலைவியின் நட்புநிலையைக் களவு என்பர். அக்கால மக்களிடையே,

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர்யாத்தனர் கரணம் என்ப” (தொல்.பொருள்.கற்.நூ.4)**

என்று திருமணம் தோன்றிய சூழலைத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்,

அத்தகைய திருமணத்தை, கரணம், மன்றல், கடிமணம் என்றழைத்தனர். தொல்காப்பியர் கற்பெனும் சொல்லிற்குத் திருமணம் என்று பொருள் கூறுவார். கற்பென்றழைக்கப்படும் திருமணம் எவ்வாறு நடைபெறவேண்டுமெனில்,

**கற்பெனப்படுவதுகரணமொடுபுணரக்**
**கொளற்குரிமரபின்கிழவன்கிழத்தியைக்**
**கொடைக்குரிமரபினோர்கொள்வதுவே (தொல்.பொருள்.நூ.140)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதன் வாயிலாகப் பெண்ணின் பெற்றோர் கொடுக்க, ஆடவன் பெற்றுக்கொள்வதே திருமணம் என்பதை அறியமுடிகிறது. அத்திருமணம் பிரம்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்று எட்டுவகையாகப் பிரிக்கப்படுகிறது.

அவ்வாறன்றி

**கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
**புணர்ந்துடன் போகிய காலையான (தொல்.பொருள்.நூ.141)**

என்ற நூற்பா உடன்போக்கு குறித்து தெரிவிக்கின்றது. அக்காலத்தில் ஒருமனையம் (ஒருமனைவி), பல்மனையம்(பலமனைவியர்), பல்கணவம் (பலகணவர்) என்று மூவகை மணங்கள் காணப்பட்டன.

**கற்புடையோர் நிலை**

மகளிர் இளமைத் தொடங்கிக் காலில் அணிந்திருந்த சிலம்பை, மணமானபின் நீக்கிவிடுவர், இதனைச் சிலம்பு கழிநோன்பு என்பர். இத்தகைய பெண்கள் ஒருவரை மட்டுமே மணக்கலாம் என்பதை,

**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்லியல்பின்றே (கலித்.114:20,21)**

என்ற பாடல் வரிகளில் முல்லைநில மகளிரைக் கூறியிருப்பினும், அனைத்து நில மகளிர்க்கும் ஏற்றதாகும். தனக்கு கலிப்பகையாருடன் மணமாகவில்லையென்றாலும், அவரையேத் தன் கணவனாகக் கொண்டு வாழ்ந்த திலகவதியார், பார்வையற்ற திருதராட்டிரனுக்காகத் தன் கண்களைக் கட்டிக்கொண்டு வாழ்ந்த காந்தாரி, தன் கணவனைப் பரத்தையர் இல்லத்திற்குச் சுமந்து சென்ற நளாயினி, அநீதியாகத் தன் கணவனைக் கொன்றமைக்காக மதுரை மாநகரையே எரித்த கற்புக்கரசி கண்ணகி, கற்பறம் பேணிய மாதவி, அசோகவனத்தில் இருந்தாலும் பத்தினியாக வாழ்ந்து தீ புகுந்து நிருபித்துக்காட்டிய சீதை போன்றோரைக் குறிப்பிடுவதன் மூலம் பக்தி இலக்கியங்களும், காப்பியங்களும், புராணங்களும் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் உன்னத நிலையை உணர்த்துகின்றன. கணவனை இழந்தோர் எரியில் மூழ்கி உயிர்நீத்தமையும் காணப்படுகின்றது.

பெண் மட்டுமல்லாது ஆடவனும் கற்புடன் வாழ்ந்தமைக்குச் சான்றாக திருமணமே செய்து கொள்ளாது பிரம்மச்சரிய விரதம் மேற்கொண்ட பீஷ்மரையும், மனைவி உடனில்லாவிட்டாலும் சீதையின் நினைவிலேயே வாழ்ந்த அயோத்தி இராமனையும், மாற்றான் மனைவியே ஆயினும் அவள் விருப்பமின்றி அணுகாத இராவணனையும் குறிப்பிடலாம்.

**கற்பு நிலைமாறியோர்**

பழங்காலத்தில் கணவன் இறந்துவிட்டாலோ, குழந்தை பெறும் தகுதியற்றிருந்தாலோ அரசகுடும்பத்தை நிலைநிறுத்த எண்ணிய அரசியர் மூத்தோர் ஆலோசனையின்படி பிற ஆடவனுடனோ, முனிவருடனோ, முனிவரால் அருளப்பெற்ற வரத்தைக்கொண்டோ குழந்தைப்பேறு அடைந்தனர். இதற்குச் சான்றாக, விசித்திரவிரியனின் மனைவியர் பீஷ்மரின் அறிவுரைப்படி (வில்லி.1.160) வியாசரின்மூலமாகவும், குந்தி, துருவாச முனிவர் அளித்தவரத்தைக்கொண்டு பாண்டுவின் ஒப்புதலுடன் சூரியன், எமதர்மன், வாயுதேவன், இந்திரன் மூலமாகவும், மாத்தரி அஸ்வினி சகோதரர்கள் மூலமாகவும் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்.(வில்லி. 1. 240,241)

திரௌபதி பாண்டவர்கள் ஐவருக்கு ஒரே மனைவியாக இருந்தாள். அர்ச்சுனன் ஒருவன் மாத்திரம் (திரௌபதி, சுபத்திரை, உலூபி, சித்தராங்கதை என) பல மணம் புரிந்தவனானான். கோவலன் இருவரையும்? சீவகன் எண்மரையும் மணஞ்செய்தனர்.

போரால் ஆடவர் பலர் மடியப் பெண்டிர் தொகை மிகுதியானது. ஆகவே ஆடவர் ஒருத்தியை மணந்துகொண்டு, பிற பெண்டிரைக் காமக்கிழத்தியராகவும், பரத்தையாகவும் வைத்துக்கொண்டனர். அவ்வாறே, பெண்கொலையாலும், பெண் பஞ்சத்தாலும் பல கணவர் மணம் ஏற்படலாயிற்று எனலாம்.

**பரத்தமை நிலை**

பரத்தையர் என்போர் இற்பரத்தை, சேரிப்பரத்தை, காதற்பரத்தை எனப்பட்டனர். இவர்களைக் கணிகை, விலைக்கணிகை, கொண்டி மகளிர், விலை நலப்பெண்டிர், பரத்தை போன்ற பெயர்களால் அழைத்தனர். திருமணம் செய்துகொள்ள வாய்ப்பற்ற மகளிர் பரத்தையராயினர் என்பர். இவர்களுக்குக் குழந்தைப்பேறு என்ற குடிச்சிறப்பு கிடையாது என்பர்.

பரத்தையர் ஒழுக்கம் இழிவானதாகக் கருதப்பட்டாலும், சங்க இலக்கியங்கள் கடிந்துரைக்கவில்லை. மேலும் பரத்தையர் ஒழுக்கம் சமுதாயத்திற்கு அஞ்சி மேற்கொள்ளப்பட்டதாகவே காட்டப்பட்டுள்ளது. மட்டுமல்லாது பரத்தமை ஒழுக்கத்தை ஆடவர் விரும்பாத நிலையும் இருந்தது என்பதை சோழன்நலங்கிள்ளி பாடிய புறநானூற்றுப்பாடலால் (புற.73)அறியலாம்.

**முடிவுரை**

இன்று ஆண்களோடு பெண்கள் சரிநிகர்சமானமாக அனைத்துத் துறைகளிலும் விளங்கி வருகின்றனர் என்றால் மிகையாகாது. அவ்வாறே இல்லற வாழ்விலும் அனைத்து செயல்களிலும் ஆண்களோடு போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது. பெண்ணுரிமைக்காகப் போராடிப் பெற்ற சுதந்திரத்தைப் பல பெண்கள் தவறுதலாகப் பயன்படுத்தி வருவதன் மூலம் மணமுறிவுகளும், கொலைகளும், குற்றங்களும் நடைபெறுகின்றன என்பது வெள்ளிடைமலை.

பெண்களைத் தற்கொலைக்குத் தூண்டாதவரை கள்ளக்காதல் குற்றமற்றது என்று நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டும் கொதித்திடாத இழிநிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ்மனம் கொண்டுள்ளோம் என்பது வருந்தத்தக்கது. எதிர்காலச் சமுதாயம் கற்பு என்றால் என்னவென்று கேட்கும்நிலை உருவாகும் என்பது உறுதி. இல்லையேல் தவறு நடைபெறும்போது தடுக்காது ஒத்துழைத்து மறைவானவற்றை வெளிகொணர்ந்து பெருமை பேசிக்கொள்ளும் புதியமுறையான 'மீடு' (ME TOO) விளம்பரநிலை தலையெடுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**துணைநூல்கள்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, சை.சி.நூ.கழகம், சென்னை, மறுபதிப்பு, 1983.
2. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், இ.வை.அனந்தராமையர் (பதி.), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,1984.
3. வில்லிபாரதம் எம்,நாராயணவேலுப்பிள்ளை, பூம்புகார்பதிப்பகம், 2013,
4. கம்பராமாயணம், கம்பன்கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1976.
5. கள்ளக்காதல் குறித்த நீதிமன்றத்தீர்ப்பு, 'மீடு" (ME TOO) குறித்த இணையச்செய்திகள்